Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 03 | 16 - 04 - 2003 | புதன்கிழமை | ஓசை 57

வன்னி A/L மாணவர்களுக்கான
விசேட கருத்தரங்கு
LOGIC
புதிய கல்வி நிலையம் -
ஆனந்தபுரம், கிளிநொச்சி.
காலம் - 17.04.2003 காலை 9 மணி
BY :- யாழ் S.R.J.சுதன், J.சிவா
வினாத்தொகுப்புகள் வழங்கப்படும்.
(சி-8075) நிர்வாகி

# புனர்வாழ்வு நிதியத்தை உருவாக்குவதில் புலிகள்-அரசு அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்

## நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கெல்கேசன்

**வடக்கு-கிழக்கு புனரமைப்பு நிதியத்தை உருவாக்கும் பொருட்டு இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட நடவடிக்கைகள் உற்சாகத்தை அளிக்கும் வகையில் இருக்கின்றன என நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் தெரிவித்துள்ளார்.**

அரசியல் விடயங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை மேசையில் ஆராயப்பட்டு வரும் அதேவேளையில் இயல்புநிலையை ஏற்படுத்துவது தொடர்பாக இருதரப்பினரும் பொறுப்புடன் செயலாற்றி வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் புனரமைப்பு நிதியத்திற்கு உதவிகளை வழங்கிய போதே அவர் இதனைத் தெரிவித்ததாக உலக வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டு. கொக்கட்டிச்சோலையில்

# கண்காணிப்புக்குழுத் தலைவர் விடுதலைப்புலிகளுடன் சந்திப்பு!

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று மட்டக்களப்பில் இடம் பெற்றுள்ளது.

கொக்கட்டிச்சோலையில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவட்ட செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

போர்நிறுத்த மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மாவட்டத் தலைவர்

(08ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு நியாயத் தன்மை எழவில்லை

## அமெ. அமைச்சர் ஆர்மிரெச் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் எமக்கு உற்சாகம் அளித்துள்ளன. ஆயினும், அவர்கள் மீதான தடையை நீக்குவதற்குரிய நியாயத்தன்மை இதுவரை ஏற்படவில்லை என அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேச் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் ஆரம்பித்துள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள விடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை குறித்து அதிருப்தி அடைந்திருப்பதை அறிந்திருக்கின்றோம்.

1997ஆம் ஆண்டு முதல் அமெரிக்காவின் தீவிரவாத இயக்கங்களின் பட்டியலில் விடுதலைப்புலிகளும்

(08ஆம் பக்கம் பார்க்க)

# மூதூர் கடற்பரப்பில் இளைஞர்கள் காணாமற் போனமைக்கும் எம்க்கும் சம்பந்தமில்லை!

## விடுதலைப்புலிகள் தெரிவிப்பு

(லண்டன்)

திருகோணமலை மூதூர் கடற்பகுதியில் இரண்டு இளைஞர்கள் காணாமல் போனதாகக் கூறப்படும் சம்பவத்துக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக விடுதலைப் புலிகள் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் பிரச்சினையைத் தூண்டிவளர்க்கும் நோக்கில் குழு ஒன்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# இல. அபிவிருத்திக்கான தேவைகள் குறித்த மதிப்பீடு வாஷிங்டன் இரண்டாம் நாள் மாநாட்டில் சமர்ப்பிப்பு

(வாஷிங்டன்)

வாஷிங்டனில் நடைபெறும் இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டிற்கான முன்னோடி மாநாட்டின் இரண்டாம் நாளான நேற்று இலங்கையின் அபிவிருத்தித் தேவைகள் தொடர்பான அறிக்கையும் இலங்கையின் பொருளாதார மதிப்பீடுகள் குறித்த அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பொருளாதார மதிப்பீடுகள் குறித்த அறிக்கையை உலக நிதியமைப்பின் நிர்வாக இயக்குநர் சுகிசெக்கியும் அபிவிருத்தித் தேவைகள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை உலக வங்கிப் பிரதிநிதியும் சமர்ப்பித்துள்ளனர்.

இந்த மாநாட்டின் ஆரம்ப நாளான நேற்று முன்தினம் அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேச், சிறிலங்காவின் அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோர் ஆரம்ப உரைநிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தென்னாபிரிக்காவின்

# தே.காங்கிரஸ் பிரமுகர்களை அமைச்சர் பீரிஸ் சந்தித்துப் பேச்சு

தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தென்னாபிரிக்க தேசிய காங்கிரசின் பிரமுகர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார்.

தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற இன ஒடுக்கு முறைகளை முடிவுக்கு கொண்டுவந்து சனநாயகத்தை ஏற்படுத்தியமை தொடர்பாக விரிவாக இச்சந்திப்பின்போது ஆராயப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளை மேற்கொண்ட தென்னாபிரிக்கா சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியமை தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

# யாழ். மாவட்டத்தில் நாற்பத்தைந்து திட்டங்களை நடைமுறைப்படுத்த சிரான் கூட்டத்தில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிரான் உபகுழுக் கூட்டம் நேற்று யாழ் அரச செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி இடம் பெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் யாழ். அரச அதிபர் தலைமையில் அரச தரப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

1073.38 மில்லியன் ரூபா பெறுமதியான நாற்பது திட்டங்களை சிரான் நடைமுறைப்படுத்த இதில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் சர்வதேச உதவி சிறுவனங்கள் யாழ். குடாநாட்டில் சிரானால் தெரிவு செய்யப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என இதில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# புலனாய்வு உத்தியோகத்தர் மீது மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இராணுவ உயர் பாதுகாப்பு வலய பகுதியான இந்த நகரில் துவிச்சக்கரவண்டி ஒன்றில் இவர் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிச் சூட்டினை மேற்கொண்டனர்.

இவர் உடனடியாக மட்டக்களப்பு

(08ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேத் தூதுவர் தலைமையில் கிளிநொச்சியில் சிரான் கூட்டம்

(லண்டன்)

வடக்கு - கிழக்கு மாகாண உடனடி மனிதாபிமான நடவடிக்கைக்கான உபகுழுவான 'சிரான்' கூட்டம் இம்மாதம் இறுதியில் இடம்பெறவுள்ளது. வரும் 25 ஆம் திகதியும் 26 ஆம் திகதியும் கிளிநொச்சியில் உள்ள சிரான் அலுவலகத்தில் இக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

நோர்வேயின் புதிய தூதுவராக பதவி ஏற்றுள்ள ஹன்ஸ் பேஸ்குவ

(08ஆம் பக்கம் பார்க்க)

# அன்னை பூபதி நினைவு நாள் பிரதேச ரீதியாக அனுஷ்டிக்க ஏற்பாடு!

(அலுவலக செய்தியாளர்கள்)

தியாக தீபம் அன்னை பூபதி அவர்களின் 15ஆம் ஆண்டு தியாக தினமும் நாட்டுப்பற்றாளர் தினமும் 17ஆம், 18ஆம் 19ஆம் திகதிகளில் மிகவும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு பிரதேச வாரியாக இம் மூன்று தினங்கள் உண்ணாவிரத நிகழ்வுகளும் சிரமதான நிகழ்வுகளும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி நிகழ்வை முன்னிட்டு வன்னிப் பகுதி உட்பட தமிழர் தாயகப்பிரதேசம் எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் மற்றும் நினைவுப் பதாதைகள் கட்டப்பட்டு அலங்கரிப்பட்டு வருகின்றன. இறுதி நாளான 19ஆம் திகதி உண்ணாவிரதம் நிறைவு பெற்று நினைவுக் கூட்டங்கள் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட பிரதான வீதியின் இரு மருங்குகள் மற்றும் பொது இடங்கள் என்பன மக்களால் சிரமதானப் பணி மூலம் துப்புரவு

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

கந்தபுரம் பஸ்சில் ஐந்துசிப் பாக் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. அதைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (சி.2836)


### கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

முருகுப்பிள்ளை நிமலராசா, பரந்தன், இல.730853467v என்பவரது தேசிய அடையாள அட்டை கிளிநொச்சியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும். (சோ)


### 2003 A/L பரீட்சையில் சித்திபெற

கையில் இருக்க வேண்டியது "பொது அறிவு - தேடலும் தெளிவும் -2003" பரீட்சைக்குத் தேவையான சமகால விடயங்களுடன். வவுனியா, யாழ் - எஸ்லாப் புத்தகசாலைகளிலும். வன்னியில் - அறிவமுது புத்தகசாலைகளில். முந்துங்கள். (3087)

### பெயர் மாற்றம்

கந்தசாமி போஸ்கரன் றிச்சட் கமம் டி2 கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட நான் எனது பெயரை 12.04.2003 முதல் கந்தசாமி பாஸ்கரன் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதனை சகலருக்கும் அறியத்தருகின்றேன். க.பாஸ்கரன். (3080)


# 59 வேலைத்திட்ட முன்மொழிவுகள்

# கிளி.சிரான் பணிப்பாளரிடம் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 59 வேலைத்திட்டங்கள் மேற்கொள்வதற்கான, முன்மொழிவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அரச செயலக மாநாட்டுமண்டபத்தில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற கிளி. மாவட்ட சிரான் உபகுழுகூட்டத்தில் முன்வைக்கப் பட்ட மேற்படி வேலைத்திட்ட முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டது. மேற்படி கூட்டத்தில் கிளி. அரச அதிபர், மேலதிக அரச அதிபர், பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கிளி.மாவட்டஅரசஅதிபர் தி.இராசநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிளி. மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய மிகமுக்கிய மான வேலைத்திட் டங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் மாவட்டத்தில் மேற கொள்ளப்படவேண்டிய பல திட்ட வரைவுகள் திணைக்களத் தலைவர்களாலும், அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளாலும் முன்வைக்கப்பட்டது.

வைத்தியசாலை, பாடசாலைகள், பெருந்தெருக்கள் புனரமைப்பு மற்றும் விவசாய உள்ளீடு, தபாலகக் கட்டடங்கள் பிரதேச செயலர் பிரிவாக அமைத்தல் போன்ற 59 வேலைத் திட்டங்கள் முன்மொழியப்பட்டு கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டது.

மேற்படி திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டு சிரான் பணிப்பாளரிடம் கையளிக்கப் பட்டது. (சோ)



கரடிப்போக்கு - உருத்திரபுரம் வீதியின் நடுவில் பெரிய குழி. அதில் விளையாடும் சிறுவர்கள் (படம் சோதி)

# தருமபுரம் வைத்தியசாலைக்கு புதிய அம்புலன்ஸ் வண்டி

(அலுவலக செய்தியாளர்)

நிக்கொட் நிறுவனத்தினரால் கிளிநொச்சி மாவட்டத்திற்கென வழங்கப்பட்ட ஒரு அம்புலன்ஸ் வண்டி தருமபுரம் அரசினர் வைத்திய சாலைக்கு கையளிப்பட வுள்ளதென கிளி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக இது வரை தியசாலையிலிருந்து நோயாளர்களை மேலதிக சிகிச்சைபெறுவதற்கு கொண்டு செல்வதற்கு ஏற்பட்ட தடங்கல்கள் நீங்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# முதியோர் இல்லத்திற்கு மின்னாக்கி அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

இலண்டன் வாழ் தமிழ் அன்பர்களினால் கிளி. வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்திற்கு மின்னாக்கி ஒன்றும் அதற்கான உதிரிப்பாகங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

முதியோர் இல்லத்தில் வதியும் முதியோர்களின் நலன் கருதி கிளி.அரசஅதிபரின் வேண்டுகைகிணங்க லண்டன் வாழ் தமிழ் அன்பர்களால் 3800 கி.வா. கொண்ட மேற்படி மின்னாக்கியும் அதற்கான உதிரிப்பாகங்களும் அன்பளிப்பாக வழங்கப்பெற்று மேற்படிப் பொருட்கள் கடந்த 13 ஆம் திகதியன்று கிளி அரச அதிபர் தி. இராசநாயகம் அவர்களினால் முதியோர் இல்ல நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புதுவருடப்பிறப்பினை முன்னிட்டு கொழும்பு மனிதநேய அமைப்புப் பிரதிநிதிகள் புதுக்குடியிருப்பு ,கிளிநொச்சி பகுதிகளிலுள்ள சிறுவர்,முதியோர் இல்லங்களுக்கு உடுபுடவைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு இனியவாழ்வு இல்லம், கிளி/வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லம், மகாதேவ ஆச்சிரம சிறுவர்களுக்கு பாடசாலைச் சீருடைகள் ,சாரம் சேலை என்பவற்றினை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இந் நிலையங்களின் நாளாந்த உணவுச் செலவிற்கென மேற்படி அமைப்பினர் ஒரு குறிப்பிட்ட நிதியினை மாதாமாதம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மிதிவெடி வெடித்து சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் மீசாலைப் பகுதியில் மிதிவெடி ஒன்று வெடித்ததில் சிறுவன் ஒருவர் பலியாகியுள்ளார்.

தலையிலும், காலிலும் படுகாயமடைந்த இவர் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்தார்.நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த றிபேக்கல்லூரி மாணவனான ஆறுமுகம் சுஜேந்திரன் (வயது - 14) என்பவரே பலியானவராவார்.



கிளிநொச்சி ஏ-9 வீதியில் வேகக்கட்டுப்பாட்டைப் பேணுமாறு வாகன சாரதிகளுக்கு அறிவுறுத்தும் தமிழீழக் காவல்துறையினர்.(படம் சோதி)

# குளோனிங் நிலையங்கள் அமைக்க அனுமதி கிடையாது!

## - அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் குளோனிங் முறையில் குழந்தைகள் உருவாக்குவதற்கான நிலையம் எதனையும் அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதிமறுத்துள்ளது.

சுகாதார அமைச்சின் உயர் அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் மனித குளோனிங் முறையை அனுமதிக்கப்போவதில்லையெனக் கூறியுள்ளார்.

# மூன்று பிரதேசசெயலகப் பிரிவுகளுக்கு ஒரேயொரு தென்னை அபி. உத்தியோகத்தர்

(அலுவலக செய்தியாளர்)

கிளி, பூநகரி, கண்டாவளைப் பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்திற்கென ஒரே ஒரு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரே கடமை புரிந்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

தற்போது தென்னை மீள் நடுகைமானிய அடிப்படையில் மேற்படி பகுதிகளில் நடைமுறைப்படுத்தப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளமையின் காரணமாக இப்பிரதேச மக்கள் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து பிரதேச செயலகங்களில் கையளித்து வருகின்றனர்.

மூன்று பிரதேச செயலர் பிரிவுகளுக்கு ஒரேயொரு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் கடமை புரிந்து வருவதால் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்படவுள்ள தென்னை மீள்நடுகையினை சிறந்த முறையில் செயற்படுத்துவதில் நெருக்கடி ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது. தற்போது கிளி. மாவட்டத்தில் விவசாய போதனாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளது போன்று பிரதேச செயலர் பிரிவுகளுக்குத் தனித்தனி தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரை நியமித்து தென்னை மீள் நடுகையினை திறம்பட மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமென தென்னை பயிர்ச்செய்கையிலீடுபட்டுள்ள பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசங்களில் வதியும் 32 ஆயிரம் குடும்பங்களில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தென்னை மீள் நடுகையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# க.பொ.த. சா/த பரீட்சை மேலும் சில பெறுபேறுகள்

மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம். இ.மாரியோமசனற்றீபன் 10ஏ, தெ.தேவசியாணி 8ஏ 1பி 1சி, பா.உமையாளன் 6ஏ 2பி 2சி, ச.நிருஞ்சன் 6ஏ 3டி 1சி,அ.அனிஸ்ரா 5ஏ 3பி 1சி, ந.சௌமியா 5ஏ 4பி 1எஸ், க.பகீரதன் 4ஏ 3பி 2சி, செ.செல்வசேகரன் 4ஏ 5சி, றோரென்சிலுக்சியா 4ஏ 5சி,ம.மயூரன் 3ஏ 3பி 2சி 1எஸ், யோ. ஜெனிபரின் சுகிர்தா 3ஏ 3பி 2சி 1எஸ், அ.யோகி ஜெமிலா 3ஏ 1பி 4சி 1எஸ், க.சுபநிதி 3ஏ 1பி 3சி 2எஸ், பி.சேர்விலாபோரி 3ஏ 5பி 1சி 1எஸ், அ.ஜோன்கிதன் 2ஏ 3பி 1சி 4எஸ், மு.நிரோஜன் 2ஏ 1பி 3சி 2எஸ், வே.பிரியதர்சன் 2ஏ 3பி 4சி, வி.பிரதீஸ்வரன் 2ஏ 2பி 2சி 1எஸ், பு.வேல்முருகன் 2ஏ 2பி 3சி 1எஸ், ம.பகீரதி 2ஏ 6பி 1சி, தி.ஜனனி 2ஏ 2பி 5சி 1எஸ், பி.பிரியதர்சினி 2ஏ 1பி 1ஏ 4சி, க.பத்மப்பிரியா 2ஏ 1பி 3சி 3எஸ், த.அமுதினி 2ஏ 1பி 3சி 3எஸ், க.சோபனா 2ஏ 6பி 2சி, தெ.சிவதீபனா 2ஏ 2பி 4சி 2எஸ், ம.தீபா 2ஏ 1பி 2சி 3எஸ்.

இரணைப்பாலை றோ.க. மகா வித்தியாலயம்.

து.மலையாகன் 6ஏ 2பி எஸ், யோ.மேரி சௌமியா 3ஏ 3பி 3சி எஸ், பி.தனுசியா 3ஏ பி 5சி எஸ், பி.சுகிதரன் 2ஏ 2பி 4சி எஸ், து.சுகந்தா 2ஏ 3பி 3எஸ், பொ.சதீஸ் ஏ 3பி 4சி எஸ், டெ.மனோகரன் ஏ 3பி 3சி 2எஸ், ஜே.ஜெரோஜ்.ஆரணி ஏ 4பி சி 2எஸ், து.ஜனுஷா ஏ பி 4சி 4எஸ், அ.மேரிஆன் புளோசிடா ஏ 2பி சி 6எஸ், க.சிறிதேவி ஏ பி 3சி 4எஸ், கு.துஷானி ஏ 2சி 5எஸ்.

# அன்பளிப்பு

லண்டன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினர் ஊடாக வெண்புறாசெயற்கை உறுப்புத் தயாரிப்பு நிறுவனத்திற்கு நவீன முறையில் உருவாக்கப்பட்ட செயற்கை கால்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.


## விசேட கருத்தரங்கு

LOGIC

கேம்பிரிஜ் கல்விநிலையம் ஸ்கந்தபுரம்.

**காலம்: 16.04.2003**

**மாலை 03.00 மணி**

BY:-யாழ்S.R.I.சுதன்

வினாத்தொகுப்புகள் வழங்கப்படும்.

(சி.8077) நிர்வாகி



## உதிர்த்த ஆண்டு நினைவில்...

தாயின் மடியில்
16 - 08 - 1982



தாயக மண்ணில்
16 - 04 - 2001

### கடற்புலி லெப். மறவன்

சிவலிங்கம் ராஜீந்திரன்

மருதநகர், அடம்பன் வாய்க்கால், கிளிநொச்சி

தலைவன் காலத்தில் தமிழீழம் காண்பதற்காக கடலில் - காவியம் படைத்து மாவீரர் ஆனீரோ அன்புத் தமிழ்மறவா.

தற்காலிக முகவரி
இல. 92/1, திருவையாறு
கிளிநொச்சி

தகவல்:
அப்பா,அம்மா,
சகோதரர்கள்

(2:277)

# வளைகுடாப் பிராந்தியத்தில் மற்றுமொரு நெருக்கடி;

# அமெரிக்க நடவடிக்கையால் கொபி அனான் கவலை!

**அமெரிக்காவின் புதிய நடவடிக்கையினால் வளைகுடாப் பிராந்தியத்தில் மற்றுமொரு நெருக்கடி தலைதூக்கியுள்ளது. சிரியாவுக்கெதிரான அமெ ரிக்காவின் தற்போதைய நிலைப்பாடுகளால் ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார்.**

ஈராக் மீதான அமெரிக்கா தலைமையிலான போர் முடிவுக்கு வருகின்ற நிலையில் அதன் பார்வை சிரியா மீதும் விழுந்துள்ளது. சிரியாவை அமெரிக்கா கடுமையாக விமர்ச்சித்து குற்றச் சாட்டுக்களை முன்வைத்துள்ளதோடு எச்சரிக்கைகளையும் விடுத்து வருகிறது.

இந்நிலையில், "ஈராக்கை தொடர்ந்து அமெரிக்கா சிரியா மீது குறி வைக்கத் தொடங்கியிருப்பது வளைகுடாப் பிராந்தியத்தில் புதிய சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது" என ஐ. நா. பொதுச் செயலாளர் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, வளைகுடாப் பிராந்தியம் ஈராக் போரால் ஸ்திரத் தன்மையை இழந்து காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியதோடு, இச்சூழலில் சிரியாவும் அமெரிக்காவின் இலக்காக மாறுவது ஆழ்ந்த கவலையை அளிக்கின்றது என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்காவின் போக்கிற்கு ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார கொள்கைக்குப் பொறுப்பான தலைவர் சொலானாவும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளமை தெரிந்ததே. அத்தோடு, சிரியாவும் இது குறித்து தனது ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளது.

## பாக்தாத்தைப் பாதுகாக்க 40,000 பொலிசார் தேவை

ஈராக்கிய பொலிசாரில் ஒரு பகுதியினர் அமெரிக்க படையினருடன் இணைந்து தலைநகர் பாக்தாத்தில் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இரண்டாயிரம் வரையான ஈராக்கிய பொலிசார் கடமைக்கு திரும்பியிருக்கின்றனர்.

பாக்தாத்தில் நடைபெறும் சூறையாடல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் இவர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

ஈராக்கிய பொலிசாரின் சுற்றுக் காவல் நடவடிக்கைக்கு அமெரிக்கப் படை... பாதுகாப்பு வழங்கி வருகின்றது.

பாக்தாத் சீரழிவைக் கட்டுப்படுத்த நாற்பதினாயிரம் பொலிசார் தேவை என தெரிவிக்கப்படுகின்றது.

கடமைக்குத் திரும்பும் பொலிசாரும் சதாமின் ஆதரவாளர்களா? என்ற பூரண விசாரணையின் பின்னரே கடமைக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.



சௌவ்பான் வைத்தியசாலையில் உள்ளூர் வைத்தியரைச் சந்திக்க தனது மகளுடன் காத்திருக்கும் ஈராக்கிய பெண்மணி

## சதாமைத் தேடி அமெரிக்கப் படைகள் நகர்ப் பகுதிகளில் தேடுதல் வேட்டை

ஈராக் சனாதிபதி சதாம் ஹுசைன் மற்றும் அவரது கூட்டாளிகளை கண்டுபிடிக்க கடும் நடவடிக்கைகளில் அமெரிக்கப் படையினர் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளனர்.

தலைநகர் பாக்தாத் மற்றும் டிக்கிரிற் உள்ளிட்ட பல நகர்களில் அமெரிக்கப் படைகள் தொடர் தேடுதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

**DNA** எனப்படும் மரபணு சோதனைகளின் அடிப்படையில் தங்கள் வேட்டை அமைந்திருப்பதாக கூட்டுப்படையின் தலைமைத் தளபதி கூறியுள்ளார்.

சதாமை உயிருடனோ, பிணமாகவோ பிடிக்கும் வரை தங்களது நடவடிக்கை ஓயப்போவதில்லை எனவும், அமெரிக்கப் படைகள் சூளுரைத்துள்ளனர்.



மீட்கப்பட்ட போர்க் கைதிகளான அமெரிக்கப் படையினர் ஏழு பேர் குவைத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

### முக்கியத்துவம் இழப்பு

(புதுடில்லி)

ஐக்கிய நாடுகள் சபை தனது முக்கியத்துவத்தை இழந்து விட்டதாக இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீதான போர் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டுத் தன்மையையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கான பயன்பாட்டினையும இழந்து விட்டது. பலமுள்ள நாடுகள் சர்வதேச நெறி முறைகளையும் ஐக்கிய நாடுகள் சபையையும் உதாசீனப்படுத்த முடியும் என்பதையே ஈராக் மீதான போர் எடுத்துக் காட்டுகின்றது என்று அவர் கூறினார்.

## இன்னும் சில வாரங்களில் ஈராக்கில் இடைக்கால அரசு

### றொனி பிளேயர் நம்பிக்கை

(லண்டன்)

ஈராக்கில் இன்னும் சில வாரங்களில் இடைக்கால அரசு அமைக்கப்படும் என்று பிரிட்டிஷ் பிரதமர் றொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் இரு வருடத்திற்குள் தேர்தல்கள் நடத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இது தொடர்பாக ஈராக்கில் உள்ள முக்கிய எதிர்க்கட்சித் தலைவர்களை அமெரிக்காவின் சிறப்புத்தூதுவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றார்.



பஸ்ராவுக்கு அருகேயுள்ள அல் - சபாரில் எரிபொருள் களஞ்சியம் தீப்பற்றி எரிகையில் அப்பால் விரைவாகச் செல்லும் உள்ளூர் வாசிகள்.

## ஈராக் தொடர்பாக விவாதிக்க ஜோன் ஹவார்ட் வாஷிங்டன் பயணம்

(வாஷிங்டன்)

அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹவார்ட் விரைவில் அமெரிக்கா பயணமாகவுள்ளார். அங்கு அவர் சனாதிபதி புஷ்சை சந்தித்து ஈராக் குறித்து விவாதிக்கவுள்ளார்.

அமெரிக்காவின் அழைப்பொன்றை ஏற்றே ஹவார்ட்டின் பயணம் இடம்பெறவுள்ளது.

ஈராக் தொடர்பாக பேசுவதற்காக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹவார்ட்டுக்கு முறைப்படியான அழைப்பொன்றை விடுத்துள்ளார்.

இரு தலைவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை எதிர்வரும் மே முதலாம் இரண்டாம் திகதிகளில் சனாதிபதி புஷ்ஷின் பணியகத்தில் இடம்பெறும் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

### தடை!

(கன்பரா)

ஆறு வெளிநாட்டு தீவிரவாத அமைப்புக்களுக்கு அவுஸ்திரேலியாவில் செயற்படத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

லஷ்கர்-இ-தொய்பா ஜெய்ஷ்-இ-முஹம்மது உள்ளிட்ட ஆறு தீவிரவாத அமைப்புக்களுக்கே அவுஸ்திரேலிய அரசு தடை விதித்துள்ளது.




ஹிஸ்புல்லா இயக்க ஆதரவாளர்கள் சிரியாவுக்கு ஆதரவாகக் கோசமெழுப்புகின்றனர்.

## இந்தியாவில் பார ஊர்திகள் சம்மேளனம் போராட்டம்

### 30 லட்சம் ஊர்திகள் சேவை நிறுத்தம்

(புதுடில்லி)

இந்தியாவில் அனைத்து பாரஊர்திகள் சங்கங்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

நேற்று முன்தினம் ஆரம்பித்த இந்த வேலை நிறுத்தம் நேற்றும் இடம்பெற்றது. நாடு முழுவதும் உள்ள முப்பது லட்சம் பாரவூர்திகள் இயங்கவில்லை.

டீசல் விலையை அடிக்கடி உயர்த்துவது, மதிப்புக்கூட்டு வரி, காப்புறுதிக் கட்டண உயர்வு என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப்போராட்டம் நடத்தப்படுகின்றது.

அகில இந்திய மோட்டார் போக்குவரத்து சம்மேளனம் இந்தப் போராட்டத்துக்கான ஏற்பாட்டைச் செய்துள்ளது இதனால், அத்தியவசியப் பொருள் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

# பாதுகாப்பு மக்களுக்கா? படைகளுக்கா?

இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டின் சிதைவிற்கும் மக்களினதும், அவர்களது உடமை அழிவிற்கும் தொடர்ந்த யுத்தமே காரணமாய்மைந்தது.

இக்கொடிய போரை முடிவுக்கு கொண்டுவரவும் சமாதானப் பேச்சின் மூலம் தீர்வினைத் தேடிக் கொள்ளவும் நாட்டின் தற்போதைய அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் முன் வந்தனர். அதன் பிரகாரமாக முதற்கட்ட நல்லெண்ண அடிப்படை முயற்சியாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இருந்தும் அக்காத்திரமான புரிந்துணர்வு நகல் வரைபில் முக்கிய அம்சமாக உள்ளடக்கப்பட்ட பல அதி முக்கிய விடயங்கள் இன்னமும் கடைப்பிடிக்கப்படாது அரச தரப்பாலும் படைத்தரப்பாலும் நிராகரிக்கப்பட்டு வருகின்றது.

ஒப்பந்தத்திற்கு வயது ஒன்று தாண்டியபோதிலும் எமது மக்களின் வாழ்க்கையானது இன்னமும் இயல்பு நிலைக்குத் திரும்பாது உள்ளது. இதனால எம்மக்கள் மத்தியில் புரிந்துணர்வு ஒப்பந்தமென் பது ஆரோக்கியமற்ற ஓர் குழந்தையாகவே நோக்கப் படுகின்றது. ஏனெனில் அதன் வளர்ச்சிப் போக்கானது மந்தகர மான தொன் றாகவே தென்படுகின்றது.

ஏனெனில், புரிந்துணர்வின் பிரகாரம் குறிப்பிட்ட சிலசட்ட திட்டங்களுக்கு அமைவாக நடப்பதற்கும் ஒத்துழைப்பை வழங்குவதற்கும் படைத்தரப்பு மறுப்புத் தெரிவித்து நிற்கின்றது. மக்களின் வாழ்விடங்கள் வரலாற்றுப் பாரம்பரிய இடங்கள் பொதுநிலையங்கள் வணக்கஸ்தலங்கள் போன்றவற்றில் இன்னும் படையினர் நிலைகொண்டுள்ளனர். அவை மாத்திரமின்றி நாளாந்தம் புதிய இராணுவ நிலைகளையும் முகாம்களையும் நிறுவும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வகையிலேயே கடந்த சில வாரங்களின் முன் யாழ். மாநகரசபை வளாகத்திற்குள்ளே பாரியதொரு படைமுகாமை அமைக்க முயற்சி செய்தனர் படையினர். இதற்கு யாழ். மக்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தனர். பொது அமைப்புகளும் கண்டனங்களைத் தெரிவித்தன. இதனால் தற்காலிகமாக அந்நடவடிக்கை படையினரால் கைவிடப்பட்டது.

இதுவரையில் நடந்து முடிந்த அத்தனை சுற்றுப் பேச்சுக்களின் போதெல்லாம் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வரும் முகமாக படை விலக்கல், மீளக் குடியேற்றம் சம்பந்தமாகவே புலிகள் பக்கமிருந்து கோரிக்கைகளாகவும் கருத்துக்களாகவும் விடுக்கப்பட்டன. புதிய முகாம்களை நிறுவுவது சம்பந்தமாக எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். மேலும் நடைபெறாது என அரச தரப்பினால் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. ஆயினும் அவையாவும் செல்லாக்காசுகளாகத்தான் ஆயின. அந்தளவிற்கு படைத்தரப்பின் அடாவடித்தனமான நடவடிக்கைகள் யாவற்றிற்கும், இசைவாக அரச தரப்பினர் நடந்து கொண்டது போன்றதொரு நிலைப்பாடு தோன்றியது.

இராணுவம் இருப்பென்பது மக்கள் செறிவாக வாழும் பகுதியில் புதிதாக நிறுவப்படும் போது அந்த வாழ்விடங்களிலும் அங்கு வாழ்ந்த எம்மக்கள் மத்தியிலும் எவ்வகையான பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதும் எம் மக்களின் வாழ்வியக்கத்தை எவ்வாறு சின்னாபின்னப்படுத்துகின்றதென்பதினையும் அனுபவவாயிலாக அனுபவித்தவர்களுக்கே புரியும். இவை ஆணையிடுபவர்களுக்கும் அவர்களின் ஆக்கிரமிப்பு கனவினைச் சுமப்பவர்களுக்குப் புரிய இடமில்லை. இராணுவம் தனது இருப்பை விஸ்தரிக்கவும் பாதுகாப்புக்களை ஏற்படுத்தவும் அது ஆக்கிரமித்த பிரதேசத்தை எப்படியாக மாற்றியமைக்கின்றதென்பதை நாம் சொல்லித்தான் தெரிய வேண்டியதொன்றல்ல. தமது இருப்பிடத்தைச் சூழ இராணுவம் மேற்கொண்ட புறநிலை மாற்றமானது காலநிலை மாற்றத்தின் போது கூட எம்மக்களுக்கு எவ்வகையான செயற்கை உபாதைகளையும் அழிவுகளையும் ஏற்படுத்துகின்றதென்பதினையும் வார்த்தைகளால் விபரிக்க முடியாது.

போரும் வேண்டாம், அழிவுகளும் வேண்டாம் எனும் பெரும் எதிர்பார்ப்புடனேயே மக்களும் ஆட்சியதிகாரத்தின் இருப்பில் புதிய தலைமைகளைத் தேர்ந்தெடுத்தார்கள். போருக்கெதிராய் வாக்களித்தார்கள். சமாதானத்தை வலியுறுத்தி நின்ற UNP அரசாங்கத்தை தேர்ந்தெடுத்தார்கள். புதிய அரசாங்கமாவது இனப்பிரச்சினைக்கு தக்கதொரு தீர்வைக் காண உழைக்குமா? அழிவுகளும் வேதனைகளும் இனியில்லாது சுதந்திரம் எம் பூமியில் உலாவுமா? எனும் எதிர்பார்ப்புடன் இருந்த மக்களுக்கு சமாதானத்தின் பின்னான போருக்கு ஆயத்தமாகும் படைத்தரப்பினரது செயற்பாடுகளும் அரசின் ஆயுதக் கொள்வனவு அவசர ஆட்சேர்ப்பு ஆகியவற்றில் காட்டும் அக்கறை தீர்க்கப்படவேண்டியவற்றில் அசமந்தப் போக்கு என்பன சமாதானத்தின்பால் ஏமாற்றத்தினையும் சந்தேகத்தினையும் எம்மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

அந்தளவிற்கு இராணுவத்தினரது பல நடவடிக்கைகள் சமாதானப் பாதையில் ஆப்பு வைப்பதாக அமைகின்றது. படைநிலைகளின் தரிப்பும் புதிய முகாம் அமைப்புக்களும் மக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலையையும் UNP அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கை மீதும் சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

படையினரின் பாதுகாப்பைக் காரணம் காட்டி மக்களின் பாதுகாப்பிற்கும், சுதந்திரத்திற்கும் ஊறுவிளைவிப்பது எந்த வகையில் நியாயமானது. இது யுத்த நிறுத்த மீறலாக தெரிவதில்லையா? மக்களுக்குச் சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுப்பது எமது பிரதான இலக்கு என ஆட்சிப்படியேறியவர்கள் அம்மக்களையே பாதுகாப்பைக் காரணம் காட்டி சக்கை பிழிவது எந்த வகையில் நியாயமானது?

இலங்கையில் இந்நாள்வரையில் தொடர்ந்த யுத்தத் திற்கு அடிப்படைக்காரணமாக அமைந்தது, சிங்களப் பெரும்பான்மையின் ஆக்கிரமிப்பு சிந்தனையை எம்மண்ணில் செயல்வடிவமிட முனைந்தமையினாலாகும். இவ்வகையான ஆக்கிரமிப்பின் சின்னமாக விளங்குபவர்கள் ஆயுதப் படையினர். இந்த ஆயுதப் படையினரது அராஜகப் போக்கின் அதிகரிப்பை தாங்க முடியாத தமிழினம் விடுதலைப்புலிகளின் பலத்தோடு விடுதலைப் போர் தொடுத்து படிப்படியாக எமது நிலங்களை மீட்டது. இருந்தும் சமாதானத்தின் பால் எம் மக்கள் கொண்ட அவாவைக் கருத்தில்கொண்டு பேச்சுவார்த்தை மூலம் இனச் சிக்கலைத்தீர்க்க விடுதலைப்புலிகள் முன்வந்தனர். அதன் பரிகாரமே தற்போது நடைமுறையில் இருப்பதாகச் சொல்லப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தம் வரையப்பட்டது. இன்றுவரை அவ் நகலின் உள்ளார்ந்த கட்டுப்பாடுகளுக்கு விடுதலைப்புலிகள் மாத்திரம் அதிகளவில் ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர் ஆனால் படைத்தரப்போ குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலையாக அவ் ஒப்பந்தத்தை சிதறடிக்கத் தொடங்கியுள்ளார்கள்.

தமிழ் மக்களின் பாதுகாப்பாகவும் கவசமாகவும் இன்றுவரை விடுதலைப்புலிகளே உள்ளனர். அவர்களது பாதுகாப்பை அவர்களே தீர்மானிக்கக்கூடிய சக்தியும் பலமும் தமிழ் மக்களிடம் உண்டு. இது சர்வதேசம் கண்டுகொண்ட உண் மையாகும். நிலைமை இவ்வாறிருக்க தமிழ் மக்களின் பாதுகாவ லர்கள் என்னும் போர்வையில் சிங்கள ஆயுதப் படையினர் எம் தாயகப்பிரதேசத்தில் எவ்வாறு இருப்பிட முடியும்.

இனப்பிரச்சினைக்கு நீதியான முறையில் சிங்களத் தலைமை தீர்வு தேட வேண்டுமாயின் அடிப்படையில் இருந்து தீர்வுகாணத் தொடங்க வேண்டும். சொந்த இருப்பிடமிழந்து உடமையிழந்து வெறும் உயிர்க் கூட்டை மட்டும் சுமந்து தெருவோரங்களிலும் மரநிழல் களிலும் அகதிகளாகவும், அனாதரவாகவும் அலையும் எம்மக்கள் தத்தமது சொந்த இருப்பிடங்களில் பாதுகாப்பைத் தேட நடவடிக்கை களை சிறிலங்கா அரசாங்கம் மேற் கொள்ள வேண்டும். எம்மக்களது வாழ்விடங்களிலிருந்து படைத்தரப்பை விலக்கி அவர்களால் மக்களுக்கு ஏற் படுத்தப்படும் அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக் கொடுக்க வழி செய்யவேண்டும். ஒட்டுமொத்தத்தில் வேண்டா விருந்தாளிகளாகவும் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவும் சுதந்திர சிதைப்பாளர்களாகவும் விளங்குகின்ற படைத்தரப்பின் இருப்பை முடிந்தளவு குறைப்புச் செய்து எம் தாயகப் பிரதேசத்தில் இயல்பு நிலையைத் தோற்றுவிக்க ஒத்தாசையிட வேண்டும். இதனையே நடந்து முடிந்த நடக்க விருக்கின்ற பேச்சுக்களின் போதும் விடுதலைப்புலிகள் தரப்பு ஆணித்தரமாக வலியுறுத்தியும் வருகின்றது. தொடர் ந்தும் வலியுறுத்தும். ஏனெனில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே பேச்சுவார்த்தை இருதரப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கது.

– குணா

# முல்லை. நகரில் சில அரச நிறுவனங்கள் செயற்பட தொடர்ந்தும் பின்னடிப்பு

## – மக்கள் பெரும் திண்டாட்டம்

(முள்ளியவளை)

1990ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பினால் முல்லை. நகரில் இருந்து இடம் பெயர்ந்த முல்லை. மாவட்ட திணைக்களங்கள் மீண்டும் முல்லைத்தீவு நகரில் இயங்க ஆரமித்துள்ளன.

எனினும் முல்லை. நகரில் இயங்கி வந்த முல்லை. வலய கல்வித் திணைக்களமும், மக்கள் வங்கி, இலங்கை வங்கி என்பன இன்னும் முல்லை. நகரில் இயங்காததால் பல தரப்பட்டவர்கள் பல நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

மாவட்டத்தின் தலைமைப்பீடமான முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனை முல்லைத்தீவில் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மேற்படி நிறுவனங்கள் வெவ்வேறு பகுதிகளில் இன்னமும் இயங்கி வருவதால் ஒரே நாளில் ஒரு தேவையை நிறைவு செய்ய முடியாமல் மக்கள் அலைந்து திரிவதை அவதானிக்க முடிகின்றது.

முல்லைத்தீவு நகரில் இருந்து குறிப்பிட்ட சில மணித்தியாலயத்தில் இடம்பெயர்ந்து உடனடியாக தற்காலிக கட்டடங்களில் இயங்கிய நிறுவனங்கள் மீண்டும் முல்லை நகரில் தற்காலிக கட்டடங்களிலாவது இயங்க ஆரம்பித்த பின்னரைக் கட்டுவதோ அல்லது புனரமைப்பு செய்வதையோ மேற்கொள்ள முடியும். ஆனால் அதிகாரிகள் தங்கள் தன்னல வசதிக்கு ஏற்பவே இவ்வாறு செயற்படுகின்றனர் என மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். (ஆ)



வவுனியா கோட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் முதன்மை வீராங்கனைக்கான வெற்றிக் கிண்ணத்தை வழங்குகிறார்.

படப்பிடிப்பு: ஆ. சுபாஸ்கரன். (வவுனியா செய்தியாளர்)

# பால் உற்பத்தியை அதிகரிக்க பொருண்மியம் தீவிர முயற்சி

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க தமிழீழ விடுதலைப்புலிகளின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தீவிரமுயற்சியெடுப்பதாக மேற்படி நிறுவனத்தின் பொறுப்பாளர் கி.நிஷாம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மாட்டுப் பண்ணையாளர்களுக்கான விசேட கூட்டமொன்று கரடியனாறு மகாவித்தியாலயத்தில் பொருண்மிய நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற போது மேற்படிக் கருத்தினைத் தெரிவித்தார்.

அங்கு நடைபெற்ற செயலமர்வில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள தென்பிராந்திய உதவிப்பணிப்பாளர் டாக்டர் ரீ.கே. தவராஜன், தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஸ், அரசியல் பொறுப்பாளர் இ.கௌ சல்யன் மற்றும் கால்நடை வைத்திய அதிகாரிகளுடன் மேலும் பல போதனாசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# குடிநீர் கிணறு அமைப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு கேவில் அ.த.க. பாடசாலைக்கு 'மூவிங் மெண்ட்' என்ற அமைப்பு குடிநீர்க் கிணறொன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

அதேவேளை, இப்பாடசாலை கட்டட வசதிகளற்று தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனால் ஆசிரியர்களும், மாணவர்களும் பெரும் நெருக்கடி களை சந்தித்து வருகின்றனர். (11)

# மட்டக்களப்பில் 150 வீடுகள் கையளிப்பு

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வரும் 150 வீடுகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவுப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 100 வீடுகளும், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மீராக்கேணியில் 50 வீடுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. மீராக்கேணியில் அமைக்கப்பட்டு வரும் வீடுகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீடமைப்புக் கடனாகவும் 50 ஆயிரம் மானியக் கடனாகவும் வழங்கப்படவுள்ளது.

நெல்லிச்சேனையில் தலா 60 ஆயிரம் ரூபா செலவில் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இத்தொகை மானியமாக மாத்திரம் வழங்கப்படவுள்ளதாக பிரதிய மைச்சர் குறிப்பிட்டார். கிழக்கு அபிவிருத்தி மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சு,தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை, மற்றும் தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றின் நிதி ஒதுக்கீடுகளின் மூலம் வசதிகளை ஏற்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# இத்தாலி செல்ல முற்பட்ட 13 இளைஞர்கள் கைது!

(கொழும்பு)

சட்டவிரோதமாக படகொன்றில் இத்தாலி நாட்டுக்குச் செல்ல பாலாவிதளுவ கடற்கரையில் காத்திருந்த 13 இளைஞர்களை மாரவில பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் 20 - 30இற்கு இடைப் பட்ட வயதுடையவர்கள் என்பதுடன், இத்தாலி செல்வதற்கு 3இலட்சம் ரூபாவை செலுத்தியதாக இந்த இளைஞர்கள் கூறியுள்ளனர்.

மாரவில மாவட்ட நீதவான் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் இவர்களை வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# புதிய சீருடை விநியோகத்தால் அலையும் பெற்றோர்கள்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களுக்கான இலவச சீருடைத்துணி விநியோக நடவடிக்கைகளில் மாற்றம் கொண்டுவரப்பட்டதன் காரணமாக தென்மராட்சிப் பிரதேசத்தில் இதைப் பெறுவதற்கு பெற்றோரும், மாணவர்களும், கிராம சேவையாளரிடமும், பிரதேச செயலகத்திற்கும் இடையில் அலைந்து திரிந்து பலத்த சிரமங் களை எதிர்நோக்குவதாகக் கூறப் படுகின்றது.

குறித்த தினங்களில் முத்திரைகள் செயலகங்களுக்கு அனுப்பப்பட்டு விட்டதாக கிராம சேவையாளர்கள் தெரிவிக்கும் போது அதை நம்பி மக்கள் செயலகங்களுக்குச் சென்றால் அங்கு அவை வந்தடைவதில்லை. இதனால் இதற்கு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## பயிற்சி நெறி

தென்மராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை நூலக ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது.

இப் பயிற்சி நெறி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நாளை17ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

# வாஷிங்டன் மாநாட்டில் இந்தியா சமாதான முயற்சிகளுக்கான ஒத்துழைப்பு?

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டிற்கு முன்னதாக இந்திய அரசின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளமையானது, அரசியல்-இராஜதந்திர ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். ஏனெனில், இனப்பிரச்சினை சர்வதேச முக்கியத்துவம் பெற்றுவிட்ட நிலையிலும் - இனப்பிரச்சினைக்கான தீர்வும் - இலங்கைக்கான நிதி உதவியும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்படுத்தப் பட்டுள்ளநிலையிலும் இந்தியாவின் பங்கேற்பானது முக்கியத்துவம் மிக்கதொன்றாகவே கொள்ளத்தக்கது.

சிறீலங்கா அரசிற்கு இந்திய அரசு நீண்ட காலமாகவே பொருளாதார ரீதியிலான உதவிகளை வழங்கி வருகின்றது. ஆகையினால், இந்தியா இக்கூட்டத்தில் பங்கேற்பினும், பங்கேற்காது விடினும் சிறிலங்கா அரசிற்கான உதவியை இந்தியா வழங்கும் என்றே எதிர்பார்க்கலாம். ஆகையினால், வாஷிங்டன் மாநாட்டில் இந்தியா பங்கேற்பது என்பது சிறிலங்காவிற்கான பொருளாதார உதவி என்பதற்கு அப்பால் இலங்கை விவகாரம் குறித்த இந்தியாவின் அரசியல்- இராஜதந்திர ரீதியிலான ஒரு நகர்வின் வெளிப்பாடு என்ற ரீதியிலேயே நோக்கத்தக்கதாகும்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் கடந்த டிசம்பரில் இடம்பெற்ற இலங்கைக்கு உடனடித் தேவைகளுக்கான நிதியுதவி கோரும் கூட்டத்தில் இந்திய அரசையும் கலந்து கொள்ளுமாறு சிறிலங்கா அரசினால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அமெரிக்கப் பிரதிநிதிகள் உட்பட சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் பலவும் கலந்துகொண்டன. சில நாடுகள் அவசர தேவைகளுக்கான நிதி உதவிகளை அறிவிப்பும் செய்தன.

ஆனால், இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்கின்றார்கள் எனக் காரணம் காட்டி இந்தியா கலந்துகொள்ளாது தவிர்த்துக் கொண்டது. விடுதலைப்புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இயக்கமாக இருக்கையில்- அவ் இயக்கம் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வது சட்டச் சிக்கல்களைத் தோற்றுவிக்கும் என இந்தியத்தரப்பால் விளக்கமளிக்கப் பட்டது. அக்கூட்டத்தில்) கலந்து கொள்ளாது தவிர்க்கவும்பட்டது.

ஆனால், தற்போதைய வாஷிங்டன் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்கேற்காத நிலையில் இந்திய அரசு இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளது. இருப்பினும், இம்மாநாட்டில் இந்தியா கலந்து கொண்டமைக்குப் புலிகள் தொடர்பாக இருந்த முட்டுக்கட்டை நீங்கியது மட்டும்தான் காரணமா? அன்றி வேறு காரணிகளும் உண்டா? என்பது முக்கியமானதொரு கேள்வியாகும். ஏனெனில், சிறிலங்காவிற்கு உதவுவது மட்டுமே நோக்கமாயின் மாநாட்டில் பங்கேற்காது நிதியுதவி செய்தல் என்பது கடினமானதொன்றாக இருக்கமாட்டாது.

இந்திய அரசு சமாதான முயற்சிகளுக்கு தாம் பூரண ஒத்துழைப்பை வழங்கத்தயாராக இருப்பதாகத் தெரிவித்துவந்துள்ளபோதும், இந்தியாவின் நிலைப்பாடு குறித்து பலமான கேள்விகள் எழாமல் இருக்கவில்லை. அதிலும், இனப்பிரச்சினை விவகாரத்தில் ஜப்பான் மற்றும் மேற்குலகினதும் செல்வாக்கு அதிகரித்து வந்தநிலையில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்துப் பலமான கேள்விகள் எழுந்தன.

ஏனெனில், ஜப்பான் போன்றவற்றின் தலையீட்டை இந்திய அரசு வெளிப்படையாகவே விமர்சித்திருந்தது. இனப்பிரச்சினை விவகாரத்தில் ஜப்பான் மேற்கொண்ட சமாதான முயற்சிகளுக்கு இந்தியா தனது ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கவில்லை. மாறாக, ஜப்பான் சமாதான முயற்சிகளில் பங்களிப்பதை இந்தியா விரும்பவில்லை. இதன் விளைவானது, சமாதான முயற்சிகளுக்கு இந்தியாவின் பங்களிப்பு என்ன என்பது குறித்துக் கேள்வியையும் எழவைத்தது.

இது ஒருபுறமிருக்க, இலங்கையில் சமாதான முயற்சிகளுக்கு எதிரான செயற்பாட்டைக்கொண்டவர்கள் இந்தியாவுடன் நெருக்கமான உறவைக் கொண்டவர்களாகவும் இருந்தனர். பொதுவாக எதிர்க்கட்சியான பொ.ஐ.முன்னணியினரும், சனாதிபதியும் உள்ளனர். இவர்கள் இந்தியா மீது நம்பிக்கை கொண்டவர்களாகவும் இருந்தனர். இந்தியாவும் இவர்களின் கோரிக்கைக்கு ஏற்றவிதத்தில் செயற்படுவதாகவுமே காட்டிக்கொண்டது.

ஆனால், விடுதலைப்புலிகளைக் காரணங் காட்டி சமாதானப் பேச்சுவார்த்தைகள், நிதியுதவி மாநாடுகளைத் தவிர்த்துவந்த இந்தியாவில் தற்போதைய உதவி வழங்குவோர் மாநாட்டிற்கு முன்னோடியான கூட்டத்தைத் தவிர்க்க இயலாததொரு சூழ்நிலை உருவாகியது என்பதே உண்மையாகும். ஏனெனில், இம்மாநாட்டிற்கு விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு அழைப்பு விடுக்கப்படாத நிலையில் இதனைப் புறந்தள்ளிவிட இந்தியாவிற்கு காரணிகள் அரிதாகவே இருந்தன. இந்நிலையில் இந்தியா வாஷிங்டன் கூட்டத்தில் பங்கேற்பது தவிர்க்கமுடியாததொன்றாக மாறியிருந்தது.

அத்தோடு இம்மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலம் இந்திய அரசாங்கம் ஒரு சில விடயங்களை வெளிப்படுத்த முனைந்திருக்கக்கூடும். இதில் முக்கியமானதாக, இனப்பிரச்சினைக்கான சமாதானத்தீர்வு முயற்சியில் தனது ஆதரவு உண்டு என்பது ஆகும். ஆனால், இதனை இந்தியாவின் பூரண ஒத்துழைப்பிற்கான குறிகாட்டியாகக் கொள்ளத்தக்கது அல்ல.

ஏனெனில், இது நிதியுதவி வழங்குவதற்கான முன்னோடிக் கூட்டம் மட்டுமே. இதில் இலங்கையின் தேவைகள் குறித்தும், அதற்கு உதவி வழங்குமாறு கோரப்படவுமே வாய்ப்புக்கள் உண்டு. ஆனால், யூன் மாதத்தில் டோக்கியோவில் நடைபெறவுள்ள மாநாட்டிலேயே சிறிலங்காவிற்கான உதவி பற்றித் தீர்மானிக்கப்படவுள்ளது.

ஆகையினால், இம் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்வதே சமாதான முயற்சிகளுக்கு அது வழங்கும் ஆதரவாகக்கெள்ளத்தக்கதாக இருக்கும். ஆனால், அம்மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வது பற்றி இன்னமும் முடிவு தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இந்தியா இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்கான வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே உள்ளன. அதாவது இம்மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றவுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளன.

வாஷிங்டன் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்காமை காரணமாக டோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்துகொள்ளாது போனால் பகிஷ்கரிப்பது பற்றிச் சிந்திப்பதாகப் புலிகள் கூறியிருப்பதைக் கொண்டு - இந்தியா இம்மாநாட்டிலும்- கலந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் இருக்குமாயினும், புலிகள் கலந்து கொள்ளாத மாநாட்டில் சமாதானத்திற்கெனப் பங்களிப்பதென்பது அர்த்தமற்றதொன்றாகவே இருக்கமுடியும்.

ஆனால், டோக்கியோ மாநாட்டில் புலிகள் கலந்துகொள்ளும்பட்சத்தில் இந்தியா கலந்துகொள்ளாது போனால், வாஷிங்டன் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளதை அதன் அரசியல் காய் நகர்த்தல் நடவடிக்கைகளாகவே கொள்ள முடியும். ஆனால் இதன் மூலம் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவானநிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என அர்த்தம் கொள்ளுதல் தவறானதாகவே இருக்கும்.

அதாவது, சிறிலங்காவிற்கு நிதியுதவி அளிப்பதற்கு இந்தியா ஆதரவான நிலைப்பாட்டைக்கொண்டுள்ளது எனக்கொள்ளுதல் சரியானதே. ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு அது ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை வாஷிங்டன் மாநாட்டில் இந்தியா கலந்துகொண்டுள்ளதன் மூலம் உறுதிப்படுத்திவிட முடியாது.

ஆனால், இவ்விடயத்தில் அமெரிக்கா இந்தியாவை விட மேம்பட்ட வகையிலான அரசியற் செயற்பாட்டைக் கொண்டுள்ளது என்றே கூறமுடியும். விடுதலைப்புலிகள் அமைப்பை தடைசெய்துள்ள அமெரிக்க அரசு விடுதலைப்புலிகளை தமது நாட்டில் நடைபெற்ற வாஷிங்டன் கூட்டத்திற்கு அழைக்காது விடினும்,டோக்கியோவில் நடைபெறவுள்ள மாநாட்டில் விடுதலைப்புலிகளுடன் பங்கேற்பதற்கு அது மறுப்புத்தெரிவிக்கவில்லை. அத்தோடு, ஒஸ்லோ கூட்டத்திலும் கலந்துகொண்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

அதாவது, உள்ளூர் சட்டங்களினால் ஏற்படக் கூடிய சிக்கல்கள், அரசியல் ரீதியாக ஏற்படக்கூடிய நெருக்குதல்கள் என்பனவற்றுக்கு முகம் கொடுக்கத் தயங்கியும் - யதார்த்த அரசியல் சூழ்நிலைக்கு தம்மைத் தயார் படுத்திக்கொள்ளாமலும் இந்தியா போன்ற நாடுகள் நடந்துகொள்கின்றமை அவர்கள் அரசியல் -இராஜதந்திர முயற்சிகளில் தோல்வியடையக் காரணமாகின்றன.

மேலும், இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகள் இன்றி சமாதானத்தீர்வொன்று காணுதல் சாத்தியப்பாடானதொன்றல்ல என்பது வெளிப்படையானது. இந்நிலையில் சாமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தைக் அடிப்படையாகக்கொண்டு, இலங்கைக்கு உலக நாடுகள் நிதியுதவிகள் அளிக்க முன்வருகையில் எவ்வாறு விடுதலைப்புலிகளை ஓரம் தள்ளிவைத்துவிட முடியும்.?

அதாவது சமாதானத்தின் முன்னேற்ற அடிப்படையில் நிதியுதவி வழங்கப்படுவதானால் அதில் புலிகளும்பங்குதாரர்களாக இருக்கவேண்டும். புலிகள் பங்குதாரர்களாக இல்லாது போனால்,சமாதானத்தின் அடிப்படையில் உதவி வழங்குவது என்பது சாத்தியமாக மாட்டாது. ஆகையினால் சமாதானத்திற்கான பங்களிப்பு, உதவி என்பன புலிகளைத் தவிர்த்து மேற்கொள்வது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருக்கமாட்டாது./ முடியாது. □□

— ஜெயராஜ் —

## ஏறாவூர் தமிழ்ப் பகுதி மீள்குடியேற்றம் எப்போது? — பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி?

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் கிராமத்தை அண்டிய ஏறாவூர் தமிழ் கிராமத்தில் சகல வசதிகளும் கூடிவாழ்ந்த மக்கள் கடந்த 1990ம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட கலவரத்தில் வீடுகள் உடைக்கப்பட்டதுடன் உடமைகள், சகோதர உயிர்கள் அனைத்தையும் இழந்த நிலையில் இடம்பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற இம்மக்கள் மீளக்குடியமர வேண்டுமென அப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம், கிழக்கு புனர்வாழ்வு அமைச்சிடம் பல கோரிக்கைகள் விடுத்தும் இதுவரையில் எதுவித நடவடிக்கைகளையும் அமைச்சு எடுக்கவில்லை.

முஸ்லிம் மக்கள் பிரச்சனையை முழுமூரமாக தீர்த்துவைக்கும் மேற்படி அமைச்சு பாதிக்கப்பட்ட தமிழ்மக்களின் பிரச்சினைகளை ஏன் கவனிக்கவில்லை என மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்திருக்கின்றது. இதேவேளை, உடைக்கப்பட்டநிலையில் பல இலட்சம் பெறுமதியான வீடுகளும், கடைத்தொகுதிகளும் இருக்கின்றன. இவர்களுக்குரிய இழப்பீடுகள் எதுவும் வழங்கப்படவில்லையெனவும் குற்றஞ்சாட்டிய மேற்படி அமைப்புக்கள் கிழக்குப் புனர்வாழ்வு அமைச்சிக்கும், மாவட்ட அரசாங்க அதிபருக்கும் மீண்டும் பாதிக்கப்பட்ட மக்களிடம் கையொப்பங்கள். பெறப்பட்ட மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- கடந்த 1990ம் ஆண்டு காலப்பகுதியில் முஸ்லிம் காடையர்களினால் உயிர், உடமைகள் இழக்கப்பட்ட நாங்கள் இடம்பெயர்ந்து எங்களது சொந்த உறவுகளிடம் தஞ்சம் தேடியிருந்தோம். அவ்வேளையில் எந்தவொரு நிவாரணப் பணிகளும் மனிதாபிமான அடிப்படையிலாவது வழங்கப்படவில்லை.

முஸ்லிம்களுக்குரிய சகல நிவாரண வசதிகள் உட்பட இழப்பீடுகளும் வழங்கப்பட்டன. ஆகவே இவ்விடயத்தில் இனபேதம் பார்க்காமல் கிழக்கு மாகாணத்திற்குரிய புனர்வாழ்வு அமைச்சராகிய நீங்கள் கூடிய கவனம் செலுத்தி மீளக்குடியமர வைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குவதோடு எங்களுக்குரிய இழப்பீடுகள் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பிரயாணிகளின் அடிப்படை வசதியற்ற மட்டக்களப்பு பஸ்தரிப்பு நிலையம்.

மட்டக்களப்பு நகர பிரதான பஸ்தரிப்பு நிலையம் பிரயாணிகளின் அடிப்படை வசதியற்ற நிலையிலுள்ளதால் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மட்டக்களப்பு பிரதான பஸ்தரிப்பு நிலையத்தில் அமைந்துள்ள இரு மலசல கூடங்களும் பாவனையற்ற நிலையில் பூட்டப்பட்டுள்ளது, இதனால் பொது மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்ய பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது, இப்பஸ்தரிப்பு நிலையத்தில் நாளாந்தம் ஆயிரக்கணக்கான பிரயாணிகள் தங்கிச் செல்லும்போது குடிநீர் வசதிகள், மலசல கூடங்கள் ஒழுங்கான முறையில் இல்லாதுள்ளது. இதனால் பயணிகள் பல அசௌகரியங்களை அனுபவிக்கவேண்டியுள்ளார்கள்.

தற்போது சமாதான சூழ்நிலையையொட்டி இரவுச்சேவை அதிகரித்துள்ளதால் இரவுச் சேவையில் ஈடுபடும் பிரயாணிகள் பஸ்தரிப்பு நிலையத்தில் தங்கி நின்று போக வேண்டியநிலை ஏற்பவதுண்டு மற்றும் இரவு வேளையில் தூர இடங்களில் செல்லவேண்டியவர்களில் வாகன வசதியற்றவர்கள் பஸ் தரிப்பு நிலையத்தில் தங்கிச் செல்லவேண்டிய நிலை ஏற்படுவதாலும் நிலையத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருப்பதாலும் இருள் சூழ்ந்த நிலையும் துர்நாற்ற மும், நுளம்புத்தொல்லையும், கால்நடைகளின் உறைவிடமாக காட்சியளிப்பதால் பிரயாணிகள் சிரமப்படவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

## பாலங்கள் திருத்தப்படாமையால் ஆபத்து நிறைந்த போக்குவரத்து

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியில் பரந்தனுக்கும் புளியம் பொக்கணை சந்திக்கும் இடையில் உள்ள ஆறுக்கும் மேற்பட்ட பாலங்கள் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து வீதிக்கு நடுவில் பாலங்கள் பெரும் குழியாக உள்ளன.

இக்குழிகளில் வீதியால் பயணிக்கும் பயணிகள் வீழ்ந்து விபத்துக்குள்ளாகின்றனர். இவ்வாறு விபத்துக்குள்ளாகுபவர்கள். தமது பயணங்களை இடையில் நிறுத்தி வைத்தியசாலைகளுக்கு செல்வதை காணமுடிகிறது.

பெரும்பாலும் இந்த வீதியால் இரவு வேளைகளில் பயணிப்பவர்களே இத்தகைய நிலைக்கு அதிகளவில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வீதி அண்மைய சமாதான சூழலில் புனரமைக்கப்பட்டுள்ளது. எனினும் இப்பாதைகளில் உள்ள சேதமடைந்த பாலங்கள் எதுவும் இது வரை காலமும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் தமக்கு உயிராபத்துக்களை ஏற்படுத்தும் மேற்படி பாலங் களை புனரமைக்காது வீதியை எதற்காக புனரமைப்பு செய்கிறார்கள் என்றும் கவலை தெரி விக்கப்படுகிறது. (மோ)

## எம்.பி.க்கள் அரச செலவில் சுற்றுலா செல்வதைத் தடுக்குக! - பிரதமரிடம் கோரிக்கை

அரசாங்க செலவில் எம்.பி.க்கள் வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்வதை நிறுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரியும் இலங்கைத் தொழிலாளர்களின் நலன்கள் குறித்து விசாரித்து தகவல் அறிவதற்காக 16 எம்.பி.க்கள் அடங்கிய குழுவின் சுற்றுப் பிரயாணம் குறித்து பிரதமருக்கு எதிர்க்கட்சித் தலைவர் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். இந்த கடிதத்திலேயே மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

குறித்த குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட ஆளும் கட்சி, பொஜமு தமிழ்க் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்கள் உள்ளடங்குகின்றனர்

# பொறுப்பற்ற வாகனச் சாரதிகள் மீது இன்று தொடக்கம் கடும் நடவடிக்கை!

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி நகரப் பகுதியில் வேக நடைமுறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிக்காத வாகனச் சாரதிகள் மீது இன்று முதல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ காவல் துறையின், வாகனப் போக்குவரத்துப் பிரிவு அறிவித்துள்ளது.**

இன்று முதல் கிளிநொச்சி நகரப்பகுதியில் வேகக் கட்டுப்பாட்டு நடைமுறை சரியாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் மணிக்கு 30 K.M வேக நடைமுறை பேணப்பட வேண்டும் எனவும், மேற்படி நடைமுறையை பின்பற்றாத வாகனச் சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கிளிநொச்சி காவல் பணிமனையின் வாகனப் போக்குவரத்துப் பரிவினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி நடவடிக்கை வீதி விபத்துக்களை தடுத்து உயிரிழப்புக்களையும் சொத்தழிவுகளையும் தடுக்கும் முகமாக எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லோ)

# பொது சுகாதாரம் பேணாத இறைச்சி வாணிபத்தினர்

(உடையார்கட்டு)

உடையார்கட்டுப் பொதுச் சந்தையிலுள்ள இறைச்சி வாணிபப் பகுதியினர் சூழலை மாசு படுத்துவதுடன் சுகாதாரத்துக்கு ஒவ்வாத நடைமுறைகளையும் மேற்கொள்வதாக நுகர்ச்சிப் பொருட்களை வாங்குவதற்கு அங்காடிக்கு செல்வோர் தெரிவிக்கின்றனர்.

அங்காடிக்குப் பின்புறமாக எலும்பு போன்ற மாமிசக் கழிவுகள் கொட்டப்படுவதாகவும் இதனை நாய் இரைக்காக கௌவிக்கொண்டு வந்து குறையாகவிட்டுவிட்டு ஓடுவதால் ஊனம் வடிந்து துர்நாற்றம் எழுவதாகவும் பல நுகர்ச்சியாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுச் சுகாதாரத்தை கவனத்திற் கொண்டு இறைச்சி வாணிபத்தின்போது மிகுதிக் கழிவுகளை வெட்டிப் புதைத்து உதவுமாறு உரிய பகுதியினரை நுகர்வோர் கோருகின்றனர். (19)

# கரைதுறைப் பற்றுப் பகுதியில் கழிவுப்பொருள் அகற்றல்

கரைதுறைப்பற்றுப்பிரதேச சபை சிற்றூழியர்களால் உழவு இயந்திரத்தில் கழிவு குப்பைகள் அகற்றும் பணி முள்ளியவளைப் பகுதியில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் உழவு இயந்திர உதவியுடன் கழிவுகள் அகற்றும் பணி இடம்பெறுகிறது.

முள்ளியவளைப் பிரதேசத்தின் பொது இடங்கள், வீதி ஓரங்கள் இதனால் சுத்தம் செய்விக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி பணிக்கு ஒத்துழைக்கும் முகமாக வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தங்கள் தங்கள் வர்த்தக நிலைய கழிவுகளை வீதி ஓரங்களில் கண்டபடி வீசாது கழிவுப் பாத்திரங்களில் சேர்த்து வைத்தால் இக்கழிவு அகற்றும் பணியின் போது அக் கழிவுகளையும்சேர்த்து அகற்றுவ தற்கு இலகுவாக அமையும் என பலரும்கருத்துத்தெரிவித்தனர்.(ஆ)

# மோட்டார் சைக்கிளில் சென்ற நபரை பின்னால் வந்த ஹைஏஸ் மோதியது!

## -சினம் கொண்டு மக்கள் எழுகை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரில் ஏ.9 வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவரை பின்னால் வந்த ஹைஏஸ் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில்சென்றவர் அதிஸ்டவசமாக எவ்வித பாதிப்புமின்றி தப்பினார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் மதியம் இடம் பெற்றது.

மேலும், மோட்டார் சைக்கிளுக்கு சிறிது சேதம் ஏற்பட்டதுடன் இதனையடுத்து அங்கு சூழ்ந்து கொண்ட மக்கள் ஆத்திரமுற்று ஹைஏஸ் வாகன சாரதியையும், வாகனத்தையும் தாக்கமுற்பட்டபோது மோட்டார் சைக்கிளில் வந்தவரின் தலையீட்டினால் அது தவிர்க்கப் பட்டது.

கிளிநொச்சி நகரப் பகுதியில் ஹைஏஸ் வாகனச் சாரதிகளின் அலட்சியமான போக்குகள்கூட அதிகளவு விபத்துக்களை ஏற்படுத்தியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றுவோர் மீது நடவடிக்கை

## – மேலதிக அரச அதிபர் அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

பூநகரி பிரதேச சபை எல்லைக்குள் வாழ்கின்ற மக்கள் தமது பாவனைக்கு தேவையான மணலை ஏற்றுவதற்கு என வலைப்பாடு கடற் கரை, கௌதாரிமுனை, குடமுருட்டி ஆகிய பகுதிகளில் மாத்திரம் மணல் ஏற்ற அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இது தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மணல் ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது. மீறி செயற் படுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித் துள்ளார். (லோ)

# 53 வருடங்களாக கவனிப்பாரற்ற நிலையில் சந்திவெளி வைத்தியசாலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கோரளைப்பற்று பிரதேச செயலகப்பிரிவிலுள்ள சந்தி வெளிக் கிராமத்தில் உள்ள வைத்தியசாலை 53 வருடங்களாக எதுவித கவனிப்புமின்றி அநாதரவான நிலையில் உள்ளது. 1950 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இவ் வைத்தியசாலை எவ்வித கவனிப்புமின்றியுள்ளது.

இங்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் இல்லை. மருந்துப் பொருட்களுக்கும் இங்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. இப்பகுதியிலுள்ள மக்கள் மேலதிக சிகிச்சை பெறவேண்டுமாயின் வாழைச்சேனை, மட்டக் களப்பு வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது.

இவ் வைத்தியசாலையை முறக்கொட்டாஞ்சேனை, சந்திவெளி, கிரான்,கோரக்கல்லிமடு, திகிலிவெட்டை, புலிபாய்ந்தகல், கோராவெளி, தரவை ஆகிய பகுதி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.



1950 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட வைத்திய சாலை எதுவித புனரமைப்புக்களுமின்றி இருப்பதைப் படத்தில் காணலாம்.

# -விமானநிலைய விஸ்தரிப்பால்- பாதிப்புற்ற குடும்பங்கள் மட்.இல் மீண்டும் பாதிப்பு

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டு மாற்று இடம் வழங்கப்பட்ட மக்கள் மீண்டும் பாதிப்புக்குஉள்ளாகியுள்ளனர்.

திமிலத்தீவு என்ற இடத்தில் வழங்கப்பட்ட காணிகளில் வீதி அபிவிருத்தி என்ற போர்வையில் சரி அரைவாசியை மீண்டும் சுவீகரிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து எல்லைக் கற்களை நாட்டி வருகின்றது. இதனால் ஏற்கனவே பாதிக் கப்பட்ட குடும்பங்கள் பெற்ற இழப்பீட்டுத் தொகையில்இருந்து நிர்மாணித்த வீடுகளின் ஒரு பகுதியை உடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக இக் குடும்பங்கள் மட்டு. மாவட்ட அரச அதிபரிடம் முறையிட் டுள்ளனர்.

1985ஆம் ஆண்டுஅவசர காலச் சட்டத்தின் கீழ் விமான நிலைய விஸ்தரிப்பிற்காக சுவீகரிக் கப்பட்ட காணிகளுக்குப் பதிலாகவே திமிலத்தீவு டானியல் சதுக்கத்தில் பதில்க் காணிகள் வழங்கப்பட்டன என்பது குறிப் பிடத்தக்கது.

# அம்புலன்ஸ் வந்தன

மன்னார் மாவட்ட வைத்திய சாலைகளுக்கு ஆறு அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.மன்னார், எருக்கலம் பிட்டி,பேசாலை, தலைமன்னார், வங்காலை, முருங்கன் வைத்தியசாலைகளுக்கு இவ் அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.


**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி மாவட்டக் கிளை**

**" உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு (மே-08) இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி மாவட்டக் கிளையினரால் கிளி. மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்படும் செஞ்சிலுவைச்சங்கம் பற்றிய அறிவை அளவிடும்"**

**போட்டிப்பரீட்சை**

மேற்படி பரீட்சை எதிர்வரும் 30.04.2003 ஆந்திகதி புதன்கிழமை முற்பகல் 10.00மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

பரீட்சைக்கான விண்ணப்ப படிவங்களை கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கிளை அலுவலகத்திலும், கரைச்சி கண்டாவளை,பூநகரி, பளை பிரிவுகளின் கிளை அலுவலகங்களிலும் பெற்று எதிர்வரும் 25.04.2003ஆம் திகதிக்கு முன் அவ்வவ் கிளைச் செயலகங்களிலேயே சமர்ப்பிக்கவும்.

பரீட்சையில் 1ஆம்,2ஆம், 3ஆம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் எதிர்வரும் 08.05.2003ஆம் திகதி அன்று வழங்கி கௌரவிக்கப்படும்.

☐ ☐ விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து கையளிக்கும்போதே தங்களுக்கான அனுமதி அட்டைகளையும் பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு
பரப்புரை/ தகவல் பிரிவு, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி மாவட்டக்கிளை. (சி-8074)

கௌரவ செயலாளர்,
இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம்,
கிளிநொச்சி மாவட்டக்கிளை.



**தமிழீழ மாணவர் அமைப்பின்**

**கணினி பயிற்சி வகுப்பு**

2004ஆம் ஆண்டு தொடக்கம் க.பொ.த. சாதாரண தரத்தில் தகவல் தொழில்நுட்பம் ஒரு பாடமாக அறிமுகமாவதை முன்னிட்டு இவ்வாண்டு தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கணினி பயிற்சி வகுப்பு.

காலம் - 16.04.2003 புதன் தொடக்கம் 19.04.2003 சனி வரை
காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 4.30 வரை.

**பயிற்சி வகுப்பு நடைபெறும் இடங்கள்.**

மடு
- அடம்பன் ம.வி
- பெரிய பண்டிவிரிச்சான் ம.வி.

முல்லைத்தீவு
- வித்தியானந்தாக் கல்லூரி
- ஒட்டுசுட்டான் ம.வி.
- முல்லைத்தீவு ம.வி.
- புதுக்குடியிருப்பு ம.வி.
- பாலிநகர் ம.வி.

கிளிநொச்சி
- தருமபுரம் ம.வி.
- அக்கராயன் ம.வி.
- முழங்காவில் ம.வி.

2003ஆம் ஆண்டு தரம் 10 இல் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரையும் இக் கணினி பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(2278) **தமிழீழ மாணவர் அமைப்பு.**



## சிந்தனைக்கு

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வந்திருக்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 16-04-2003

## இதற்கே அஞ்சினால்.

வடக்கு - கிழக்கில் 1000 தொண்டராசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது குறித்து பரிசீலித்துவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இத்தகைய நியமனங்கள் வழங்குவதினால் தென்பகுதியில் எதிர்ப்புக்கள் குறித்துப் ஆலோசித்து வருவதாகக் கூறப்படுவது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் ஆளுமை குறித்த கேள்வியை எழவைப்பதாகிறது.

வடக்கு - கிழக்கில் தொண்டர் ஆசிரியர்கள் நியாயமற்ற கோரிக்கைகள் எதையும் முன்வைக்கவில்லை. தாங்கள் கடந்த காலத்தில் அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவைக்குப் பிரதிபலனாக தமக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட வேண்டுமென்றே கோருகின்றனர். அவர்களின் இச்சேவையினை எவருமே நிராகரிக்கவில்லை. அவர்களின் சேவையின்றி வடக்குக் கிழக்கில் கல்விச் செயற்பாடுகளைத் தொடர்வதென்பதே பெரும் நெருக்கடிமிக்கதொன்றாகும்.

அதாவது, வடக்கு - கிழக்கில் தொண்டராசிரியர்கள் சேவை கிடைக்காதுவிடின் பல பாடசாலைகள் செயலிழக்கவேண்டிய நிலை உருவாகக்கூடும். ஏனெனில், ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களின் வெற்றிடங்கள் இன்னமும் நிரப்பப்படாமலே உள்ளன. இவை கடந்த காலங்களில் சிங்கள ஆட்சியாளர்களின் பாரபட்சமான நடவடிக்கைகளின் விளைவே ஆகும்.

இதனை புரிந்துகொள்ளவதற்குப் பெரியளவிலான தேடுதல் ஒன்றும் தேவையில்லை. தென்னிலங்கை பாடசாலைகளில் ஆசிரியர்கள் வெற்றிடங்கள் இல்லாமல் இருப்பதும், சில மாவட்டங்களில் தேவைக்கும் மேலதிகமாகவே சிங்கள ஆசிரியர்கள் இருப்பதும் இதனைப் புரிந்துகொள்ளப் போதுமானதாகும். ஆகையினால், பற்றாக்குறையாகவுள்ள இடங்களுக்கு - பதவி வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை நியமிப்பதற்கு ஏன் சிந்திக்க வேண்டும்.

தென்னிலங்கையிலும் வேலையற்றோர் பட்டாளம் உள்ளது என்பது உண்மையே. கல்விகற்ற இளைஞர், யுவதிகள் கூட்டம் வேலையற்று அலைகின்றது என்பது உண்மையே. ஆனால், அதற்காக அவசரமாக பூர்த்தி செய்யப்படவேண்டிய வெற்றிடங்களை பூர்த்தி செய்யாமல் இருப்பதென்பது தவறான - ஒரு வகையில் இனவாத நடவடிக்கைகளாகவே கொள்ளத்தக்கதாக இருக்கும்.

ஏனெனில், அவசிய தேவைகள், நியாயபூர்வமான கோரிக்கைகள் என்பனவற்றை அரசிற்கெதிராக குரல்கள் எழும்பும் எனக் காரணம் காட்டி தட்டிக்கழிக்க முற்படுவது இனவாத நோக்கிலானபார்வையாகவே இருக்கமுடியும். இதில், ஆட்சியாளர்களாக இருப்பினும் சரி, இந் நியமனங்களை காரணங்காட்டி போராட முன்வருபவர்களாயினும் சரி, தூண்டுபவர்களாயினும் சரி அனைவரும் இனவாதிகளாகவே இருப்பர்.

இது ஒருபுறமிருக்க - இத்தகைய சாதாரண ஆசிரியர்களின் பதவி வெற்றிடங்களையே நிரப்புவதற்கு ......................., அஞ்சும் ஆலோசிக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் எவ்வாறு தமிழ் மக்களின் உரிமைகளை அங்கிகரிப்பதற்கு தயக்கமின்றி செயற்பாட்டை மேற்கொள்பவர்கள் என எதிர்பார்க்க முடியும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காண்பதானால், அது பெரும் சவால்களை சந்திக்க வேண்டியதாக இருக்கும் என்பது எதிர்பார்க்கத்தக்கதே. கடந்த காலத்தில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்று காண முடியாமல் போனமைக்கு சிங்களத் தலைவர்கள் துணிவுடன் செயற்படாமல் போனமையே காரணமென்பது வெளிப்படையானது.

இந்நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை காண்பதானால், சிங்கள ஆட்சித் தலைவர்கள் உறுதியான தீர்மானங்களை மேற்கொள்பவர்களாகவும், நியாயத்தின்பாற் செயற்படுபவர்களாகவும் இருத்தல் வேண்டும். அது மட்டுமல்ல, அர்ப்பணிப்புடன் செயலாற்றுபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

ஆனால் தொண்டர் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கத் தயங்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கூறப்பட்ட பணியை துணிவுடன் மேற்கொள்வாரா என்பதே இன்றுள்ள கேள்வியாகும். ஆனால், தனது பணி எத்தகைய கடுமையானது என்பதை ரணில் விக்கிரமசிங்க உணர்ந்து கொண்டுள்ளார் என்பது உண்மையானால் அவரின் நடவடிக்கைகள் எத்தகையதாக இருக்கும் என்பதை பொறுத்திருந்து பார்த்தல் நல்லது.

# திருமலையில் 'பொங்கு தமிழ் எழுச்சி' தாயகம் தழுவிய ரீதியில் நடத்த ஏற்பாடு

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் மிகப் பெரியளவில் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வொன்றை நடத்த திட்டமிடப்பட்டு வருகிறது. இதற்கான ஆலோசனைக் கூட்டம் விரைவில் இடம்பெறவுள்ளது.

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வினை மீண்டும் திருகோணமலையில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் யூன் மாதம் இந்த பொங்கு தமிழ் நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழர் தாயகத்தின் அனைத்துப் பிரதேச மக்களையும் கலந்துகொள்ள வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொங்கு தமிழ் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பான முன்னேற்பாட்டு ஆலோசனைக் கூட்டம் திருகோணமலை கலாச்சார மண்டபத்தில் விரைவில் இடம்பெறவுள்ளது.





திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் இடம்பெற்ற கலை, பண்பாட்டுக் கழகத்தின் இசை, நடன, நாடக விழாவில் கடந்த சனியன்று விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன் சிறப்புரையாற்றுவதையும், அரங்க நிகழ்வொன்றையும் படங்களில் காண்க.

# இரு கட்டங்களாக உயர்தரப் பரீட்சை; விடைத்தாள் முறையிலும் மாற்றம்!

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைகள் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 21ஆம் திகதி வரை நாடு பூராகவும் இடம்பெறவுள்ளது.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு மேமாதம் 14, 15, 16ஆம் திகதிகளில் இப்பரீட்சைகள் இடம்பெறாது.

இப்பரீட்சைக்கு 2 லட்சத்து 51 ஆயிரத்து 727 பரீட்சாத்திகள் தோற்றுகின்றனர்.

இவர்களில 2 லட்சத்து 12 ஆயிரத்து 194 பரீட்சார்த்திகள் பாடசாலைகள் மூலமும் ஏனையவர்கள் தனிப்பட்ட ரீதியிலும் தோற்றுகின்றனர்.

இம்முறை பரீட்சைகளின் போது, காகிதாதிகளின் செலவீனங்களை குறைக்கும் வகையில் தனித்தனி விடைத்தாள்களுக்குப் பதிலாக ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் கட்டுத் தொகுதி ஒன்று வழங்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் மகிந்த விஜயசிறி தெரிவித்துள்ளார்,

தேவைப்படின் மேலதிக விடைத் தாள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. அடுத்த சில தினங்களில் மீண்டும் பேச்சு!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் அடுத்த சில தினங்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளன.

இரு கட்சிகளுக்கும் இடையிலான உடன்படிக்கை தயாரிப்பது தொடர்பாக இப்பேச்சுக் களின்போது ஆராயப்படும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து செயற்படுவது தொடர்பான உடன்படிக்கை அடுத்த மாதம் கைச்சாத்திடப்படவுள்ளது என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இரு கட்சிகளும் ஏற்கனவே பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தி உள்ளமை தெரிந்ததே.

# தந்திகள் தமிழில் ஏற்க மறுப்பு — அமைச்சிடம் முறைப்பாடு

(கண்டி)

பதுளை பிரதான அஞ்சல் அலுவலகத்தில் தமிழ் மொழிமூலம் எழுதப்பட்ட தந்திகள் பொறுப்பேற்கப்படாதது குறித்து, பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலாளருமான க. வேலாயுதம் மக்கள் தொடர்பாடல் அமைச்சிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

தாய்மொழி அரச கருமமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளபோதிலும், தமிழ் மொழி மூலம் அலுவல்களை மேற்கொள்ள முடியாது தமிழ் மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அம்மக்கள் தத்தமது அவசர தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே தமிழ் மொழிமூலம் தந்திகளை அனுப்புகின்றனர்.

இத் தந்திகளை அஞ்சல் அலுவலக உத்தியோகஸ்தர்கள் ஏற்றுக்கொள்ளாதது கண்டனத்துக் குரியதே.

இது உடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டுமென வேலாயுதம் எம்.பி. தமது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்

# தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் கைவிடப்பட்டன!

தெற்காசிய விளையாட்டு போட்டிகள் (சாவ்) கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் ராவல் பிண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டு சம்மேளன செயற்குழு கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டது.

பாகிஸ்தானில் 2001ஆம் ஆண்டு நடைபெறவிருந்த 9ஆவது சாவ் போட்டிகள் இதுவரை மூன்று தடவைகள் ஒத்தி வைக்கப்பட்டன. தற்போது இந்தியா போட்டிகளில் பங்கேற்க மாட்டாது என வெளியான தகவல்களை தொடர்ந்தும் இந்த இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சாவ் போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அண்மையில் செய்திகள் வெளிவந்திருந்தமையும் தெரிந்ததே.

# சிறிலங்காவிலும் தடை !

(கொழும்பு)

குளோனிங் முறையை மேற்கொள்வதற்கான எந்த வசதிகளும் இங்கு அமைக்க சிறிலங்கா அரசு அனுமதிக்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் தடைசெய்யப்பட்டுள்ள மனித குளோனிங் முறையில் மனிதனை உருவாக்குவது, சிறிலங்காவிலும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எவரும் மனித குளோனிங் செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தென்னாபிரிக்கா முதலிடம்

சர்வதேச கிரிக்கெட் சபை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் அடிப் படையில் தென்னாபிரிக்காவுக்கு முதலிடம் கிடைத்துள்ளது. இவ்வணிக்கு 21 புள்ளிகள் வழங்கப் பட்டு ள்ளது.

20 புள்ளிகளுடன் அவுஸ்திரேலியா 2ஆம் இடத்திலும் நியூசிலாந்து, சிறிலங்கா, இங்கிலாந்து முறையே அடுத்த மூன்று இடங்களையும் பெற்றுள்ளன. இந்தியா 16 புள்ளிகளுடன் 6ஆவது இடத்தை பிடித்துள்ளது.

# இந்தியா பேரழிவு ஆயுதங்களை வைத்துள்ளதால் முன்னறிவித்தலின்றி அதன் மீது தாக்குதல் நடத்தலாம்

## - பாகிஸ்தான் கூறுகிறது

பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை இந்தியா மறைத்து வைத்திருப்பதாகவும், இதனால் முன் அறிவித்தல் எதுவுமின்றி அந்நாட்டின் மீது தாக்குதல் நடத்த முடியுமென பாகிஸ்தான் கூறியுள்ளது.

ஈராக் மீது போர் ஆரம்பிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் பாகிஸ்தான் மீது தாக்குதல் நடாத்த இந்தியாவிற்கு உரிமையுள்ளதாக அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்கா கூறியிருந்தார். இக்கருத்திற்குப் பதில் கருத்தாகவே பாகிஸ்தான் இதனைக் கூறியுள்ளது.

மேலும் இந்தியா ஐக்கியநாடுகள் அமைப்பின் சட்டதிட்டங்களை மீறி பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களை மறைத்து வைத்திருப்பதாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைப்பின் செய்தித்தொடர்பாளர் கூறியுள்ளார்.

# மகனைக் காணவில்லை தாய் தற்கொலை!

## - மூதூரில் பதற்றம்

(திருகோணமலை)

திருகோணமலை மூதூரில் தனது மகன் காணாமற்போன கவலை தாங்க முடியாது முஸ்லிம் தாயார் ஒருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதனை அடுத்து ஏற்பட்ட பதற்ற சூழ்நிலையினால் மூதூர் பகுதிகளில் கடைகள் மூடப்பட்டிருப்பதுடன் ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இச்சம்பவத்தை அடுத்து முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் கொழும்பில் இருந்து விசேட உலங்கு வானூர்தி மூலம் மூதூருக்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்துள்ளார்.

# ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது திருமலையில் கைக்குண்டு வீச்சு

(திருமலை) .

திருகோணமலை உட்துறை முகவீதியில் அமைந்திருக்கும் ஈ.பி.டி.பி அலுவலகத்தின் மீது நேற்று முன்தினம் இரவு கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி ஒன்றில் சென்றவரே இத்தாக்குதலை நடத்தியுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக சிறிலங்காப் பொலிசார் விசாரித்து வருகின்றனர்.

# சோதனைச் சாவடியில் கைக்குண்டு வீச்சு

## - பெண் ஒருவர் காயம்

(வவுனியா)

வவுனியா ஈரப்பெரியகுளத்தில் சிறிலங்காப் படையினரின் சோதனைச் சாவடியில் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் [illegible]ற்று முன்தினம் இரவு 11.30 மணிக்கு இடம்பெற்றது. இத்தாக்குதல் யாரைக் குறிவைத்து நடத்தப்பட்டது மற்றும் யார் இத்தாக்குதலை நடத்தினார்கள் என்பது தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

# சிறிலங்காவிற்கு இந்தியா 1000 கோடி ரூபா நிதியுதவி

(வாஷிங்டன்)

உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட இலங்கையை மறுசீரமைக்க இந்தியா 1000 கோடி ரூபா உதவி வழங்கும் என அமெரிக்காவில் நடைபெற்ற நன்கொடையாளர்கள் மாநாட்டில் இந்தியத் தூதுவர் லலித் மான்சிங் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் முன்னோடி மாநாட்டில் பேசும் போதே அமெரிக்காவுக்கான இந்தியத்தூதுவர் லலித் மான்சிங் இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மை பேணப் படவேண்டும் என்பதில் இந்தியா உறுதியாகவுள்ளது.

இலங்கையில் உள்ள அனைத்து இனத்தவர்களின் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றும் வகையில் பேச்சுவார்த்தை மூலம் தற்போது உள்ள பிரச்சினைகளுக்கு அமைதித் தீர்வு காணும் இலங்கை அரசின் முயற்சிகளை இந்தியா ஆதரிக்கின்றதெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நூற்றாண்டு விழா

(மன்னார்)

மன்னார் மாவட்ட எருக்கலம்பிட்டி மகளிர் மகாவித்தியாலய நூற்றாண்டு விழா நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு விசேட அதிதியாக வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மசூர் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் நூல்வெளியீட்டு விழாவும், விசேட கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (மி)

# கொழும்பில் மூன்று தினங்களில் விபத்து, மோதல்களில் 20 பேர் பலி

(கொழும்பு)

கொழும்பில் கடந்த மூன்று தினங்களில் இடம்பெற்ற விபத்து மற்றும் மோதல் சம்பவங்களில் 20 பேர் பலியாகியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்தனர்.

மேலும் நூற்று ஐம்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

# சமாதான முயற்சியில் இல. சிறந்த முன்மாதிரி

## - தென்னாபிரிக்க சமாதானத்தூதுவர் பாராட்டு

(கேப்டவுன்)

சமாதான முயற்சியை வெற்றிகரமாக முன்னெடுப்பதில் சிறந்த முன்மாதியாக இலங்கை திகழ்கின்றது என முன்னாள் தென்னாபிரிக்க சமாதானத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சியின் வெற்றி குறித்து சர்வதேச சமூகம் பாராட்டியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். தென்னாபிரிக்காவிற்கு உத்தியோகபூர்வ சுற்றுப்பயணம் சென்றிருந்த போது அமைச்சர் பீரிஸையும், வெளிநாடு சென்றிருந்த புலிகளின் தூதுக்குழுவினரையும் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர்கள் பற்றாக்குறையால் வவு.கல்விவலயத்தில் நெருக்கடி

(வவுனியா)

வவுனியா கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக 20 பாடசாலைகள் ஓர் ஆசிரியர் பாடசாலையாக இயங்கிவருகின்றன என வவுனியா வலயக் கல்விப் பணிமனை தெரிவித்துள்ளது.

இக்கல்வி வலயத்தில் உள்ள 89 பாடசாலைகளில் இரண்டு பாடசாலைகள் சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்புக்காரணமாக மூடப்பட்டுள்ளன.

ஏனைய பாடசாலைகளில் குறைந்தது நான்கு ஆசிரியர்களுடன் இயங்க வேண்டிய 20 பாடசாலைகள் ஓர் ஆசிரியருடன் இயங்கிவருகின்றன.

இவ்வலயத்திற்கு 610 ஆசிரியர்கள் தேவையாக உள்ள இடத்து 335 ஆசிரியர்களே உள்ளனர். இவ்வலயத்தில் மொத்தம் 12,796 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இங்கு 29 பாடசாலைகள் இடம்பெயர்ந்த நிலையில் வேறு இடங்களிலேயே இயங்கிவருகின்றன.

# மனித மரபணுவை விஞ்ஞானிகள் தொடர்ச்சியாக வரிசைப்படுத்தி சாதனை

மனிதனின் மரபணுக்களை விஞ்ஞானிகள் பகுப்பாய்வு செய்து அதனைப் படமாக வரைந்துள்ளனர்.

மரபணு ஆய்வில் இது ஒரு முக்கிய மைல்கல் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக சுமார் 2.7 மில்லியன் டொலர் செலவில் மேற்கொண்டு வந்த ஆராய்ச்சியின் விளைவாக இந்தப் பணி முடிக்கப்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

சர்வதேச விஞ்ஞானிகள் அடங்கிய குழு ஒன்று நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு முன்னதாகவே மனிதனின் மரபணுக்களை தொடர்ச்சியாக வரிசைப்படுத்தியிருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# கருணாநிதி விருப்பம்

(சென்னை)

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தடங்கலின்றி முன்னெடுக்கப்பட வேண்டுமென திராவிட முன்னேற்றக்கழக தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு.கருணாநிதி தெரிவித்துள்ளார். பேச்சுவார்த்தை தொடர்பாக நிருபர்கள் கேட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையிலேயே கருணாநிதி தனது இந்த விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

# ——படகில் வெடிவிபத்து——

# மன்னார் கடலில் ஒருவர் பலி

மன்னார்க் கடலில் மீன் பிடிப்படகு ஒன்றில் ஏற்பட்ட வெடிவித்தில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

மீன் பிடிப்பதற்குப் பயன்படுத்த வைத்திருந்த டைனமைட் வெடிபொருள் வெடித்திருக்க வேண்டும் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

## - திலீபன் மருத்துவசேவையின் -

# 10 ஆவது மருத்துவமனை வவு. புளியங்குளத்தில்

தியாகி திலீபன் மருத்துவ சேவையினரின் பத்தாவது மருத்துவமனை வவுனியா புளியங்குளத்தில் எதிர்வரும் சனிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

தற்போது நயினாமடு, மாங்குளம், ஐயன்கன்குளம், கற்சிலைமடு, அளம்பில், பூநகரி, ஆழிபவளை, நெடுந்தீவு, அடம்பன் ஆகிய இடங்களில் தியாகி திலீபன் மருத்துவமனைகள் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றன.

இதேவேளை, தியாகி திலீபன் நடமாடும் மருத்துவ சேவையினர் பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களுக்கு, கால ஒழுங்கின்படி மருத்துவ சேவையினை வழங்கி வருகின்றனர்.

# உலக இந்து மாநாட்டை முன்னிட்டு வவுனியாவில் எழுச்சிப் பேரணி

(வவுனியா செய்தியாளர்)

எதிர் வரும் மே மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள இரண்டாவது உலக இந்து மாநாட்டினை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் உள்ள இந்து ஆலயங்கள் எழுச்சிப் பேரணிகளை நடாத்த உள்ளன. நாளை மறுதினம் நடைபெறவுள்ள இவ் எழுச்சிப் பேரணி வவுனியா பிரதேச செயலகத்தில் இருந்து ஆரம்பமாகும். தொடர்ந்து எழுச்சிப் பேரணி புதுக்குளம் பிள்ளையார் கோயில், சிவபுரம் சிவன் கோயில் ஆகியவற்றிற்குச் சென்று மதியம் கிடாச்சூரி கண்ணகை அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து மாலை புறப்பட்டு பம்பைமடு நரசிம்மர் கோயில், நெளுக்குளம் முருகன் கோயில், குமாங்குளம் சித்தி விநாயகர் ஆலயம் ஆகியவற்றிற்குச் சென்று இரவு வவுனியா பிரதேச செயலகத்தை வந்தடையும். (10)

### அன்னை...

செய்யப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரில் சிறுவர் பூங்காவில் அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அத்துடன் அனைத்துத் திணைக்களங்களிலும் அன்னை பூபதியின் உருவப்படம் வைக்கப்பட்டு நினைவு நிகழ்வு அனுஷ்டிக்கப்படுகின்றது. (லோ,மி,சோ,ஆ,05)

### நோர்வேத்...

தலைமையில் இந்தக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும், சிறிலங்காவின் சமாதான செயலக செயலர் பேனாட் குணதிலகவின் தலைமையில் அரச பிரதிநிதிகளும இக்கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர்.

### புலனாய்வு...

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக அவசர சிகிச்சைக்காக உலங்கு வானூர்தி மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். லான்ஸ்கோப்ரல் பரமானந்தன் ரவீந்திரகுமார் ஆகிய இவர் புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று பேர் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை மட்டக்களப்பு நகரில் இராணுவப் புலனாய்வைச் சேர்ந்த ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த சம்பவத்தை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கணேசமூர்த்தி பகீரதன், சிதம்பரப்பிள்ளை துஷ்யந்தன், ஞானப்பிரகாசம் மரியசாந்தன் ஆகியோரே இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

### இல.அபிவி...

விதார் கெல்கேசன் உரைநிகழ்த்தினார்.

மேலும் டோக்கியோ மாநாட்டின் முன்னேற்றம் குறித்து சிறிலங்காவுக்கான ஜப்பான் சிறப்புத் தூதுவர் யசுகி அகாசியும் உரையாற்றியுள்ளார்.

பல்வேறு நாடுகளின் நிதியமைச்சர்கள், பொருளாதார அபிவிருத்தியமைச்சர்கள், தூதுவர்கள் ஆகியோருடன் சர்வதேச அமைப்புக்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளன.

### கண்காணிப்பு...

நோயல் ஜாக்கெல்சன் தலைமையிலான குழுவினர் தென் தமிழீழத் துணை அரசியல் பொறுப்பாளர் கரிகாலனை சந்தித்து உரையாடியுள்ளனர்.

### காணாமற்...

அந்தச் சூழ்வை மக்கள் இனங்கண்டு கொள்ள வேண்டும். பொறுமையுடன் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல துணைபுரிய வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காணாமல்போனதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவரின் தாயார் தற்கொலை புரிந்திருப்பதற்கும் விடுதலைப்புலிகள் தமது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

### யாழ். மாவட்ட...

இக் கூட்டத்தில் 45 திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் ஐந்து திட்டங்களை சர்வதேச உதவி நிறுவனங்கள் அமுல் படுத்தி உள்ளன.

இக்கூட்டத்தில் மொத்தம் 65 திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

மேலும் முன்னர் முன்வைக்கப்பட்ட திட்டங்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது பற்றியும் இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தலை கண்காணிக்கச் செயலகம் ஒன்று யாழ். அரச அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

### புலிகள் மீதான...

இடம்பெற்றுள்ளனர். அதனால் அவர்களை மாநாட்டுக்கு அழைப்பதில் விசா வழங்குவது உட்பட பல சட்டரீதியான பிரச்சினைகள் உள்ளன. விடுதலைப்புலிகள் தொடர்பாக எங்களது நிலைப்பாடு தெளிவாக உள்ளது.

தீவிரவாதச் செயல்களை விடுதலைப்புலிகள் தமது சொல்லிலும் செயலிலும் களைந்தாலே அவர்கள் மீதான தடையை நீக்குவது குறித்து பரிசீலிக்க முடியும்.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகளை நோக்கும் பொது விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு அரசியல் அமைப்பாக உருவாவதையே எதிர்பார்க்கிறோம். இதனை நிரூபிப்பது அவர்களைப் பொறுத்தது.

சிறிலங்கா அரசு மற்றும் விடுதலைப் புலிகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது. சர்வதேச நாடுகளின் ஆதரவு சமாதானத்தை எட்டுவதற்கான பெரும் சக்தியைக் கொடுக்கும்.

சமாதான முயற்சிகளில் நோர்வே மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் செய்துவரும் பங்களிப்பு பாராட்டுக்குரியது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.